<u>காஞ்சிபுரம் மாவட்டம்</u>

<u>குடும்ப அட்டைதாரர்களுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டைகளை மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் திரு.பா.பெஞ்சமின் அவர்கள் வழங்கினார். மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப அவர்கள் உடனிருந்தார்.</u>

தமிழ்நாடு முழுவதும் குடும்ப அட்டைதாரர்களுக்கு மின்னணு குடும்ப அட்டைகளை வழங்கும் பணியை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்கள். காஞ்சிபுரம் மாவட்டத்தில் குன்றத்தூர் பேரூராட்சியில் இன்று புதிய மின்னணு குடும்ப அட்டைகளை மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் வழங்கி பேசும்போது:

"மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முன்னாள் முதல்வர் "**அம்மா**" அவர்கள் தமிழக மக்களுக்கு பல்வேறு உன்னதமான திட்டங்களை வழங்கியுள்ளார்கள். அவர்களின் வழிகாட்டுதலின்படி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்களுக்கு புதிய திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளார்கள். அதனடிப்படையில் மாண்புமிகு முன்னாள் முதல்வர் "**அம்மா**"அவர்கள் அறிவித்த திட்டமான பழைய குடும்ப அட்டைகளுக்கு பதிலாக மின்னணு குடும்ப அட்டைகள் காஞ்சிபுரம் மாவட்டத்தில் தொடக்கமாக 74 குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டது. இந்த மின்னணு குடும்ப அட்டைகள் குடும்ப அட்டைதாரர்களுக்கு தொடர்ச்சியாக வழங்கப்படும். புதிய அட்டையை பெறும்வரை பொதுமக்கள் பழைய குடும்ப அட்டைகளையே பயன்படுத்தி பொதுவிநியோக திட்டத்தில் தமிழக அரசால் வழங்கப்படும் அனைத்து பொருட்களையும் பெற்றுக் கொள்ளலாம். மின்னணு குடும்ப அட்டைகளில் பொதுமக்கள் தங்களுக்கு தங்கள் குடும்ப உறுப்பினர்களின் பெயர்களை சேர்க்கவோ, நீக்கவோ எளிதில் செய்யமுடியும். மேலும் நியாய விலைக் கடைகளில் இருப்பில் உள்ள பொருட்கள் குறித்து அறிந்து அவற்றை வாங்கி கொள்ளமுடியும். காஞ்சிபுரம் மாவட்டத்தில் 665000 குடும்ப அட்டைகள் மின்னணு குடும்ப அட்டைகளாக படிப்படியாக விரைந்து மாற்றி வழங்கப்படும்" என தெரிவித்தார்.

இவ்விழாவிற்கு தலைமை ஏற்று பேசிய மாவட்ட ஆட்சித்தலைவர் தமிழ்நாட்டில் அனைத்து தரப்பு மக்களுக்கும், குறிப்பாக ஏழை எளிய மக்களுக்கு உணவு பாதுகாப்பு அளிப்பதே பொதுவிநியோக திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும். இதில் அனைத்து தரப்பு மக்களும் பயனடைய வேண்டும் என்கிற காரணத்தினால்தான் வருமான அடிப்படையில் குடும்ப அட்டைதாரர்களை பிரிக்காமல் பாகுபாடற்ற அனைவருக்குமான பொதுவிநியோக திட்டத்தை தமிழ்நாடு அரசு சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் பொதுவிநியோக திட்டத்தின் கீழ் 926 முழுநேரக் கடைகளும் 550 பகுதி நேர கடைகளும் ஆக மொத்தம் 1476 கடைகள் மூலம் பொதுமக்களுக்கு அத்தியாவசிய பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. தற்போது உணவு பொருட்களை விநியோகம் செய்வதை கணிணி மயமாக்கப்பட்டு அதன் ஒருபகுதியாக அச்சிடப்பட்ட குடும்ப அட்டைகளுக்கு பதிலாக Smart Card எனப்படும் மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கப்படுகிறது. வெளிப்படை தன்மை மற்றும் எளிதில் கையாளுதல், நீண்டகால பயன்பாடு ஆகியவை Smart Card வழங்குவதின் முக்கிய நோக்கமாகும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பாராளுமன்ற உறுப்பினர்கள் திரு.கே.என்.ராமச்சந்திரன், திருமதி.மரகதம் குமரவேல், சட்ட மன்ற உறுப்பினர் திரு.கே.பழனி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.வாலாஜாபாத் கணேசன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு.காஞ்சி பன்னீர்செல்வம் ஆகியோர் கலந்து கொண்டனர். முன்னதாக மாவட்ட வருவாய் அலுவலர் திரு.எஸ்.சௌரிராஜன் அனைவரையும் வரவேற்றார். மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.ஆர்.பன்னீர்செல்வம் நன்றி கூறினார்.